# இயல் 2.2
# கல்விச்செல்வமும் பொருட்செல்வமும்

அ) வினாக்களுக்கு விடையளிக்க.

1. களர்நிலத்துக்கு ஒப்பானவர் - யார்?

விடை: கல்வி கற்காதவரே களர்நிலத்துக்கு ஒப்பாவர்.

2. கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?

விடை: பொருட்செல்வம் கள்வரால் கவர்ந்து செல்லக்கூடியது ஆகும்.

3. 'கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்' என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை எழுதுக.

விடை:

'கல்விச் செல்வமே மிகவும் சிறந்த செல்வம்' என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்கள் பின்வருமாறு:

- கற்காதவன் பயன்படாத நிலம் போன்றவன்.
- கல்வி கற்றவருக்கு மட்டுமே மதிப்பு கிடைக்கும்.
- பொருட்செல்வம் கொடுத்தால் குறையும், திருடரும் திருடுவர். ஆனால் கல்வி குறையாது. திருடவும் முடியாது.

- இப்பிறப்புக்கும் மறுபிறப்புக்கும் பயன் தருவது கல்வியே ஆகும்.

4. கல்விச் செல்வமா? பொருட்செல்வமா? எது அவசியம் என்று நீ நினைக்கிறாய்? ஏன்?

விடை:

கல்விச் செல்வத்தையே அவசியம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால், பொருளால் புகழ் அடைந்தவர் மக்கள் மனதில் இருப்பதில்லை. கல்வியால் புகழ் அடைந்தவர் மட்டுமே மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்பர்.

5. கல்வி எதற்கு வழி செய்கின்றது?

விடை:

கல்வி நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து நல்வழியில் நம் வாழ்வை அமைத்துக் கொள்ள உதவுகின்றது.